

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பாக மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் திருமங்கலத்தில் நடைபெற்றதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை ஆற்றினார். உடன் இளம் பேச்சாளர் ஜோஸ்பின் இலக்கிய ராணி, கழக நிர்வாகிகள் ஸ்ரீதர், முத்துக்குமார், ஆதவன் அதியமான், தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன்,நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.




தூத்துக்குடி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாவட்ட குடும்ப நல செயலகம் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன். உடன் மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஜூலை 19 முதல் 22 வரை

# குற்றாலத்தில் சாரல் விழா!

## மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் பேட்டி!

தென்காசி, ஜூலை.13-

தென்காசியில் குற்றாலம் சாரல் திருவிழா வருகிற 19-07-2025 ல் துவங்கி 27-07-2025 வரை அதாவது 9 நாட்கள் நடைபெறுகிறது.இதில்19 ம் தேதி முதல் 22 ம் தேதி வரை 4 நாட்கள் ஐந்தருவி பகுதியில் உள்ள சுற்றுச்சூழல் பூங்காவில் மலர் கண்காட்சி நடைபெறுகிறது என தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் பேட்டியின் போது செய்தியளர்களிடம் தெரிவித்தார்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கூட்டரங்கில் 2025-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சாரல் விழா தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தென்காசி மாவட்டத்தில் ஆண்டுதோறும் சாரல் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன் படி இந்த ஆண்டும் முதலமைச்சர்அவர்களின்ஆலோசனைப்படி ஜூலை மாதம் 19 ம் தேதி முதல் 27 ம் தேதி வரையில் குற்றாலத்தில் நடைபெற உள்ளது.

மேலும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பாக ஐந்தருவிப் பகுதியில் உள்ள சுற்றுச்சூழல் பூங்காவில் 19.07.2025 முதல் 22.07.2025 வரையில் மலர்க்கண்காட்சி நடைபெறவுள்ளது.

சாரல் திருவிழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

19.07.2025 அன்று பரத நாட்டியம், ஜிக்காட்டம், நையாண்டிமேளம் , கரகாட்டம் மற்றும் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சியும், 20.07.2025 அன்று கொழுகொழு குழந்தைகள் போட்டி,கிராமியகலைநிகழ்ச்சி, கைச்சிலம்பாட்டம் நிகழ்ச்சி,கேரளா மாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சி யும், 21.07.2025 அன்று யோகாசன போட்டிகள், நாட்டிய நாடகம்,வில்லிசை நிகழ்ச்சி, தோல்பாவைக்கூத்து நிகழ்ச்சி, மற்றும் திரைப்பட மெல்லிசையும்.

22.07.2025 அன்று படகுப்போட்டி, பல்சுவை நிகழ்ச்சி, கிராமிய கலை நிகழ்ச்சி, கொடைக்கானல் - பூம்பாறை பழங்குடியின மக்களின் தோடர் நடனம் நிகழ்ச்சி,கர்நாடக மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் திரைப்பட மெல்லிசையும், 23.07.2025 அன்று பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியம்,கவிதை மற்றும் பாட்டுப் போட்டி,திருநங்கைகள் வழங்கும் பல்சுவை நிகழ்ச்சிகள், கணியான்கூத்து நிகழ்ச்சி, பரதநாட்டிய நிகழ்ச்சி, கர்நாடக மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் மெல்லிசை நிகழ்ச்சியும்,

24.07.2025 அன்று கோலப்போட்டி, வில்லிசை நிகழ்ச்சி, மல்லர்கம்பம் நிகழ்ச்சி, பரதநாட்டியம் நிகழ்ச்சி, ஆந்திரா தெலுங்கானா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள், மற்றும் நாட்டுப்புற பல்சுவை நிகழ்ச்சியும், 25.07.2025 அன்று அடுப்பில்லாமல் சமைத்தல் மற்றும் சிறுதானிய உணவுப்போட்டி, நையாண்டிமேளம் மற்றும் கரகாட்டம், கிளாரிநெட் இசைநிகழ்ச்சி, தப்பாட்டம் நிகழ்ச்சி, ஆந்திரா தெலுங்கானா மாநில கலைஞர் களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் திரையிசை தெம்மாங்கு நிகழ்ச்சியும்,26.07.2025 அன்று பளுதூக்குதல், வலுதூக்குதல் மற்றும் ஆணழகன் போட்டி, கிராமிய கலை நிகழ்ச்சி, நகைச்சுவை நிகழ்ச்சி,ஜிம்ளாமேளம் (எருதுகட்டு மேளம்) நிகழ்ச்சி,மெல்லிசை நிகழ்ச்சியும்,

27.07.2025 அன்று நாய்கள் கண்காட்சி,நாட்டிய நாடகம் நிகழ்ச்சி, கிராமிய நாட்டுப்புற கலைநிகழ்ச்சி,மாடாட்டம் மற்றும் மயிலாட்டம் நிகழ்ச்சி, மகாராஷ்ரா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சி, இன்னிசை நிகழ்ச்சியும் நடை பெறவுள்ளது.

மேலும் சாரல் திருவிழா துவக்க நாளான 19 ஆம் தேதி அன்று அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்,சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பி க்கின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் உடன் இருந்தார்.



விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் , சிதம்பராபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் 298 பயனாளிகளுக்கு ரூ .27.63 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜா, சிவப்பிரகாசம், மாவட்ட பொருளாளர் செட்டிக்குறிச்சி பிரபாகரன், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில், மேலூர் தொகுதி வடக்கு ஒன்றியம் கிடாரிப்பட்டி ஊராட்சியில் பொது மக்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் குமரன், தொகுதி பொறுப்பாளர் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொது மக்கள் பங்கேற்றனர்.

### சிவகங்கை வடக்கு ஒன்றியத்தில்

# 1120 மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்குகிறார்!

சிவகங்கை. ஜூலை 13.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த மாதம் முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர், கழகங்கள் சார்பில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று (13 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை) சிவகங்கை வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் ஏற்பாட்டின் பேரில் திருமலையில் மாலை 4 மணி அளவில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் 1120 மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது .1120 மகளிர்களுக்கு நலத்திட்ட உதவி களை வழங்கி கூட்றவுத்துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளருமான கே.ஆர். பெரியகருப்பன் திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சிவகங்கை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் சு.சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். முன்னதாக திருமலை மணிமாறன் வரவேற்று பேசுகிறார். திருமலை கிளைச் செயலாளர் பொற்கிழி ஆத.சோலைமலை நன்றி கூறுகிறார்,

பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் தலைமையில் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.



சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் 315 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு நெல்லை பாளையங்கோட்டை தெற்கு பஜாரில், உள்ள மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் முழுதிரு உருவச் சிலைக்கு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல்வஹாப் எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து புகழுஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் டி.பி.எம்.மைதீன்கான், சுப.சீதாராமன், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, சுரேஷ், தினேஷ், பிரபு பாண்டியன், ஆவின் ஆறுமுகம், டாக்டர்.சங்கர்,வழக்கறிஞர் சங்கர், அண்டன் செல்லத்துரை,செய்யது முகைதீன், சாமுவேல், பேபி கோபால், கருப்பசாமி கோட்டையப்பன், காசிமணி, பேச்சியம்மாள்,சகாய ஜூலியட் மேரி, ரம்ஜான் அலி மற்றும் அனிதா, சௌந்தரமுத்துராஜ்,எல்ஜசி பேச்சிமுத்து உள்பட மாநில,மாவட்ட, மாநகர,பகுதி,வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் கே.தாவூது அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த 1ஆம் தேதி மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். என்.சித்திக் அமின் தாவூது ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ஏ.கே. ஆறுமுகம், மாதவன், வேலு, செல்வராஜ், ஆழ்வார் முத்துமாரி, முகேஷ் சர்மா, சரவணன், ஷேக், சிக்கந்தர், ராவுத்தர் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றார்கள்.